1981 மார்ச் 25]

வேதாரண்யம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 481— திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) ஆய்வு வேலைகள் தமிழ்நாடுகுடிநீர் வடிகால் வாரியத்தினால் நடைபெற்று வருகின்றன. அவை துரிதப்படுத்தப்படுகின்றன.

நாகர்கோவில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்

*வினா எண் 482— திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு வீட்டு மனைகள் வாங்குவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் கடன் வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) மொத்தக் கடனாக ரூ. 31,65,625 வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவரவர்களே, கிரயம் வாங்குவதற்கு முன்பாக சேல்ஸ் அக்ரீமெண்ட் போடப்பட்டதா ? அது மத்திய சங்கத்திற்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மத்திய சங்கத்திற்கு அனுப்பித்தான், அவர்கள் அனுமதி பெற்றுத்தான் செயல் பட்டிருக்கிறார்கள். இந்தக் கடன் ஒரே தவணையில் வழங்கப்படவில்லை; மூன்று தவணைகளில் முறையாக வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் நன்கு செயல்படும் சங்கங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. கடன் வழங்கப்பட்ட விவரம்:—

25–10–1979 ஆம் தேதி ரூ. 3,87,500.

19–12–1979 ஆம் தேதி ரூ. 1,97,125.

11–4–1980 ஆம் தேதி ரூ. 25,81,000.

இந்த முறையில் கடன் பெற்றிருக்கிறார்கள்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, 1979–80 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி புரதம சங்கத்தின் மூலம் 50 இலட்ச ரூபாயை கிளைச் சங்கங்கள் மூலம் வீடு கட்ட மனை வாங்குவதற்காக கடனாகத் தருவதற்கு என்று ஒரு திட்டம் தீட்டப்பட்டு அதற்கு ஒப்புதலும் அளிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி 50 இலட்சம் ரூபாய் தமிழகம் முழுவதற்கும் என்று ஒதுக்கப்பட்ட நிலையில் ஒரு குறிப்பிட்ட சங்கத்திற்கு மட்டும் 30 இலட்ச ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறதே. நான் யாரையும் குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. விவரத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்கிறேன். ஆகவே விற்பனை ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்பாக இவ்வளவு பெரிய தொகையை ஒரு குறிப்பிட்ட ஒரு சங்கத்திற்கு மட்டும் அனுப்புவது நியாயமா ? அல்லது அப்படி அனுப்பலாம் என்று இந்தத் திட்டம் உருவாக்கப்பட்ட நேரத்திலேயே ஏதேனும் வழி முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட சங்கத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள தொகை அதிகம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களேயானால் அதற்காக தனிக் கேள்விபோட்டால் விவரங்களை சேகரித்துத் தர முடியும். நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் தமிழ் நாட்டிலேயே மிக நல்ல முறையில் இயங்குகின்ற ஒரு சங்கமாகும். எனவே அதையொட்டி இவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கலாம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதற்காக இவ்வாறு கொடுக்கப்பட்டது என்று தனிக் கேள்வி கேட்டால் அதற்கான காரணங்களையும், ஏன் இவ்வளவு அதிகமாக கொடுப்பதற்கு வேண்டி வந்தது என்பதையும் அறிந்து பதில் சொல்ல முடியும்.

TRUTH ALONE TRIUMPHS

அடவிநயனார் கோவில்அணை கட்டும் திட்டம்

*வினா எண் 412— திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தாலுக்கா மேற்கரைப் பகுதியில் அடவிநயனார் கோவில் அணைக்கட்டுத் திட்டப் பணிகள் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அணை வேலைகள் எப்போது முடிவடையும் ?